# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

| | | | |
|---|---|---|---|
| துணர் ம்கூ | சுபானு—மார்கழி | 1943—திசம்பர் | மலர் கூ |


## பொழிலாசிரியர் கருத்துரைகள்.

நம் சங்கத் தமிழ்ப் பொழி லன்பர்கட்கு;

எளியேனின் வணக்கம் என்றும் உரித்தாகுக.

பொழிலன்பர்களே! யான், நம், சங்கத்தே வந்தடைந்தவுடன் சங்கம் எளியேற்குக் கரந்தைப் புலவர் கல்லூரி ஆசிரியனும் பேற்றை நல்கி யாதரித்தது. அடுத்தயாண்டில் ஆசிரியர் பணியுடன் மாணவர் விடுதியைக் கண்காணிக்கும் பணியையும் பிணைத்து இருபணிகளையும் ஒருங்கு நடத்துக எனப்பணித்தது. அடுத்தயாண்டில் நூல்நிலையத்தை மேற்பார்க்கும் பணியையும் பிணைத்து முப்பணிகளையும் ஒருசேரப் புரிகவென ஆணையிட்டது. இதுபோது பொழிலாசிரியர்க்குரிய முழுப்பொறுப்பினையும் சங்கம் எனக்கு வழங்கியுளது. சங்கம் இப்பேற்றை நல்கக் காரணராயிருந்த பெரியோர்கட்கும், பொழிலன்பர்கட்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**கடமையும் அச்சமும்.**

நம் சங்கத்தாயினுக்குரிய தொண்டியற்ற யான் எழுமையுங் கடமைப் பட்டுள்ளேன். பொழிலாசிரியர்க்குரிய கடமையின் நிறைவுடைமையினையும், என் குறைவுடைமையினையும் எண்ணி, இப்பொறுப்பேற்க முதலில் அஞ்சினேன். பின்னர், எனது நல்லாசிரியரும், இளமை தொட்டே என் வாழ்வின் உயர்வில் நாட்டமுடையாரும், கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவரும்

ஆகிய பேராசிரியர் திருவாளர், நாவலர், பண்டிதர். ந. மு. வேங்கட சாமி நாட்டார் அவர்கள், பக்கத்திலுள்ளமையின், அச்சந்தவிர்ந்து இப்பணியினைத் துணிபுடன் ஏற்றுக்கொண்டுள்ளேன் என்பதனைப் பொழிலன்பர்கட்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**நன்றியறிவுரை.**

இதுகாறும் பொழிலாசிரியராயிருந்து, பொழில் இந்நன்னிலையுற உழைத்தவராகிய பேராசிரியர் கரந்தைக் கவியரசர் திரு. R. வேங்கடாசலம்பிள்ளையவர்கட்கு என் நன்றியறிதலான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இவர்கள் எனக்குத் துணைநின்று உதவ உறுதிகூறியுள்ளார்கள் என்பதனையும் பொழிலன்பர்கட்கு அறிவிக்கின்றேன்.

**குறைகளைந்தருள்க.**

பொழிலிற் காணப்பெறும் குறைபாடுகளை எடுத்துக்காட்டி எளியேனை அன்புடன் திருத்தியருளுமாறு பொழிலன்பர்களாகிய தங்களை மீண்டும் வணங்கி வேண்டிக்கொள்ளுகின்றேன்.

**உடைமைப் பொருட்குத் தனித்தன்மை யேது?**

சங்கத்தாய் முற்கூறியாங்கு இப்பணிகளை யெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக எளியேற்கு, அளித்து என்னை என்றும் மீளா அடிமையாக்கிக் கொண்டாள். மேலும் எற்கு எப்பணியளிப்பாளோ யானறியேன். யான் அவள் உடைமை; உடையாட்கன்றி உடைமைப் பொருளாகிய எற்கு, யானென்னும் தன்மை யேது? உடைமைப் பொருளை உடையாள் எவ்வாறாளினும் அவளாளும் முறையில் அமைந்து கிடப்பதே அப்பொருள் இயல்பாம். உடைமைப் பொருளாகிய என்னை ஓம்படை புரிவாள் என்னும் துணிபுபற்றி அவள்பால் அடைக்கலம் புகுகின்றேன்.

**அடியேன் நின்னடைக்கலமே.**

அன்னையே! நீ எப்பணியில் ஏவினும் உடலுரமுள்ள அளவும் செய்கின்றேன். என் கடன் பணிசெய்து கிடப்பதே, நின் கடன் அடியேனையும் தாங்குதல். தாங்கியருள்வாயாக. இன்று நின், திருவடித் தாமரையை வணங்கிப் பொழிலாசிரியர்க்குரிய பணியை ஏற்று நிற்கின்றேன். அடைக்கலப் பொருளாகிய எளியேற்கு, எத்தகைய குறைபாடும் நேராவண்ணம் காத்தருள்வாயாக.

# கலைச்சொல்லாக்கம்

சேலம் கல்லூரித்தலைவர்,

திரு. அ. இராமசாமிக்கவுண்டர் M. A., L. T., அவர்கள்.

நவம்பர்மாத "வசந்தாவில்" ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களைப்பற்றி ஓர் அரிய கட்டுரை வெளிவந்துள்ளது. சென்னைப் பல் கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத்தலைவர் இராவு சாகிபு S. வையாபுரிபிள்ளையவர்களால் எழுதப்பெற்ற அக்கட்டுரை நன்கமைந்துள்ளது. ஆனால் தமிழ்ப்பற்றுடையாரை இகழ்வதும், கலைச் சொல்லாக்க இயக்கத்தைக் கண்டிப்பதுமாகிய ஒருபகுதி அக்கட்டுரையைப் பாழ்படுத்துகிறது. அதனை யீண்டு அப்படியே குறிப்பாம்.

"நூற்றொகை விளக்கத்திலுள்ள முக்கியமான ஒரு பகுதியைக் குறித்து இங்கே குறிப்பிடவேண்டியது அவசியம், 'கலைச்சொல்லாக்கம்' என்ற தொடர் இப்பொழுது எங்கும் முழங்குகிறது. மாநாடுகள் கூட்டப்படுகின்றன. சாதிச் சச்சரவுகளை விளைத்துத் தமது ஆத்திரங்களைத் தீர்த்துக் கொள்ள இதுவே தக்க காலம், என்று பலரும் இதில் சேர்ந்துள்ளார்கள். பலவகை முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் சுந்தரம்பிள்ளை கைக்கொண்டுள்ள சிறந்த முறை நமக்கு ஊக்கம் அளிக்கின்றது. நூற்றொகை விளக்கத்திலே ஆங்கிலத்திலுள்ள பல விஞ்ஞான சொற்களுக்குரிய மொழி பெயர்ப்புச் சொற்களை இப் பேராசிரியர் தந்திருக்கின்றனர். வடசொற்களை விலக்கும் முயற்சியே இதில் கிடையாது. அறிவுப் பெருக்கம் ஒன்றே குறிக்கொள்ளப் பட்டது. இதற்குஇடையூறு விளைப்பன வெல்லாம் தற்கொலையாகும் என்பது நன்கு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கும் தமிழரது அறிவு வளர்ச்சிக்கும் வேண்டுவன செய்தவர்களில் சுந்தரம்பிள்ளை தலைசிறந்தவர். இவர் காட்டிய முறை கைக்கொள்ளத்தக்க தென்பது கூறவும் வேண்டுமோ?"

கலைச் சொல்லாக்கத்தால் வடமொழியாளர்க்கும் தமிழர்க்கும் 'சாதிச் சச்சரவுகள்' விளையும் என்பதே திரு. பிள்ளையவர்களின் கருத்தென்பது வெள்ளிடை. தாய்மொழிப் பற்றென்பது

மக்கள் உள்ளத்துள் ஆழ்ந்து கிடப்பதொரு சிறந்த பகுதியாகும். அதனை இரண்டொருவர் மறந்திருக்கலாம்; பிறமொழி பயின்றோர் புறக்கணிக்கலாம். ஆனால் அவ்வுணர்ச்சி பொது மக்களின் உள்ளத்தே பொதிந்து கிடப்பதை வரலாற்று வாயிலாக அறிகிறோம். எனவே, தமிழன் தமிழ்ச் சொற்களைப் பேணுவது இயல்பே யாகும். அதைக்கண்டு பிறமொழியாளர் வெகுள்வது பொருத்தமற்றதாகும். பள்ளிகளில் பாடங்களைத் தாய்மொழியில் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதற்குக் காரணம் ஆங்கில வெறுப்பன்று; தாய்மொழிப்பற்றேயாகும். அங்ஙனமே, தமிழர் தமிழ்ச் சொற்களை வேண்டுவது வடமொழி வெறுப்பாலன்று; தமிழ் ஆர்வத்தால் என்க. தமிழரது தாய்மொழி யுணர்ச்சியைக் கண்டு வடமொழியினர் வெகுண்டு சச்சரவு விளைவிப்பின் அது தமிழரை வீண் வழக்கிற்கிழுப்பதேயாகும். வீண்போர் துவக்கின் வெற்றி காணும் வரையிலும் தமிழர் முனைந்து நிற்பவர் என்பதை இந்திப் போரின் மூலமாக முன்னரே உணர்ந்த வடமொழியினர் வாளாவிருக்கின்றனர். ஆனால், அவர்களுக்காகப் பிள்ளையவர்கள் பரிந்து முன்வந்து சச்சரவைக் கிளப்பி விடுவதைத் தமிழ் மக்கள் எங்ஙனம் பொறுக்க முடியும்? வடமொழியாளர் ஒருகால் தமிழுணர்ச்சி மாநாட்டை எதிர்ப்பினும் அவ்விடையூற்றுக் கிடையூறாய் நின்று தமிழருக்குத் தொண்டாற்றும் கடப்பாடுடைய நமது பிள்ளையவர்கள் தமிழுணர்ச்சி இயக்கத்தினரையே இழித்துக் கூறுதல் அவரது பெருந்தன்மைக் கேற்றதன்றென வருத்தத்துடன் குறிப்பிடுதும்.

"தமது ஆத்திரங்களைத் தீர்த்துக்கொள்ள இதுவே தக்க பொழுதெனப் பலரும் தமிழுணர்ச்சி இயக்கத்தில் சேர்ந்துள்ளனர்" எனப் பிள்ளையவர்கள் எழுதினர். அவர்களுடைய பெயர்களை வெளிப்படையாகக் குறிக்காமல் "பலர்" என்று பொதுப்படக் கூறுவது பயனற்றதாம். யாம் அறிந்த அளவில் அந்தப் பலரும் தமிழ்ப் பற்றுடையவர்; தமிழ்த் தொண்டினையே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்; தமிழின் ஆக்கத்தையே தமது ஆக்கமாகக் கண்டவர்; தமிழுக்காகச் சிறை புகவும் முனைந்து நிற்பவர். இத்துணை நன் மக்கண் மீது நம் பிள்ளையவர்களுக்குண்டான உளக்கொதிப்புக்குக் காரணம் இன்னதென எமக்கு விளங்கவில்லை. தனித்தமிழை ஒரு ஆரியராவது இன்று ஆதரிக்கின்றாரா? இல்லை. இன்றைய தனித்தமிழ் உணர்ச்சியே பிற்காலத்தில் திருமணம், கடவுள் வழிபாடு, இன்னிசை, அரசியல் முதலிய துறைகளிலும் இத்தகைய கிளர்ச்சிகளை அடுத்தடுத்துத் தோற்றுவித்துத் தமது உரிமையை அழித்துவிடும் என அஞ்சும் ஆரியர் கலைச் சொல்லாக்கத்தைக் கண்டிப்பது இயல்பே. ஆரியரின் உதவியால் பதவியும்

பட்டமும் பெற விரும்பும் தமிழரில் சிலரும் அங்ஙனம் செய்தல் கூடும். ஆனால் நமது பிள்ளையவர்கள் இந்தத் திருப்பணியில் இறங்கியதுதான் எமக்கு வியப்பைத்தருகின்றது.

வட சொற்களை விலக்கும் முயற்சியில் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை ஈடுபடவில்லை என்றுகூறி அப்பெரியாரைத்தம் கட்சியினராகக் காட்டுகிறார் திரு. வையாபுரி பிள்ளையவர்கள். தமிழுணர்ச்சியை முதன் முதலில் தமிழருக்கூட்டித் தமிழரை விழிக்கச்செய்த அப்பேரறிஞரைத் தமிழுணர்ச்சிக் கழகத்தாரின் பகைவரெனக் கூறுதல் உண்மையைத் திரித்துக் கூறுதலேயாம்.

"ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே"

எனவும்,

"எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே"

எனவும் கூறிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளைக்கும், நமது திரு. வையாபுரி பிள்ளைக்கும் பிள்ளை யென்ற பெயர் ஒற்றுமை தவிர பிற ஒற்றுமைகள் இருப்பனவாகக் காண்கிலேம். அங்ஙனமிருந்தும் அவரைச் சந்திக்கிழுப்பது விந்தையாக உள்ளது. காலப் போக்குக்கேற்பச் சில வடசொற்களை ஆசிரியர் சுந்தரம்பிள்ளை ஆண்டிருக்கலாம். ஆனால், தமிழ்ச் சொற்களிருக்க அவற்றை நீக்கி வட சொற்களைக் கொள்ளுதலே தலைசிறந்ததென்று எங்கேனும் அவர் சொன்னதுண்டா? கலைச் சொற்கள் கூடுமான வரையிலும் தமிழில் இருக்கவேண்டும் என்றதை அன்னார் யாண்டேனும் கண்டித்ததுண்டா? இல்லை எனின் அவரைத் துணைக்கழைப்பதின் உட்கருத்தென்ன?

வடமொழி விலக்கினை நீக்கி அறிவுப் பெருக்கத்தையே குறிக்கோளாகத் தமிழ் மக்கள் கொள்ள வேண்டும் என்கிறார் நமது பிள்ளையவர்கள். வடசொல் கோடலால் அறிவுப் பெருக்கமும் வடசொல் நீக்கலால் அறிவுச் சுருக்கமும் ஏற்படும் எனப் பிள்ளையவர்கள் நினைப்பாராயின் அது வருந்தத்தக்கதாம். தன்னம்பிக்கையும், தன் மான வுணர்ச்சியும், தன்மொழிப் பற்றும் பெற்று ஏதிலார் வலையினின்றும் விடுபடுதலே அறிவுப் பெருக்கத்தின் அறிகுறியென்பதைப் பிள்ளையவர்கள் உணர்வாராக. வடமொழிக் கடனால் தமிழை வளர்க்க விரும்புகிறார் நம் பிள்ளையவர்கள். "கால்டுவெல்" துரைமகனார் நடு நிலைமையுடன் ஆராய்ந்து கண்ட அரிய முடிபுகளை ஈண்டுக் குறிப்பிடுவாம்.

(1) தமிழ் ஆரியமொழிக் கலப்பின்றி இயங்கவல்லது.
(2) வடசொற்களை நீக்குவதால் அழகான நடையை அடைவது.

(3) ஒரு பொருள் குறிக்கும் பல சொற்களில் வள முடையது.

(4) வட சொற்கள் கடன் வாங்கப் பெற்றிருப்பினும் அவற்றிற்குத் தக்க தமிழ்ச் சொற்கள் உண்டு; அவை வட சொற்களைவிட மிகுந்த பொருத்த முடையனவாய் இருக்கின்றன.

இம் முடிபுகளால், மொழி ஆராய்ச்சியின்றித்தேவையில்லா வழியும் வடசொற்களைக் கண்டபடி நம்மனோர் கடன் வாங்கினார்கள் என்பது விளங்குகிறது. அதன் பயனாகத் தமிழ் மக்களில் சிலரும், மேல் நாட்டார் பலரும் வடமொழியிலிருந்தே தமிழ் பிறந்ததெனக் கருதிய காலமுமுண்டு. இசைக்கலையின் தமிழ்ச் சொற்களைப் புறக்கணித்தோம்; அவற்றிற்குத் தக்க வட சொற்களையே ஆதரித்துப் போற்றினோம். அதன் பயனாக, தமிழருக்குப் பண்டைக்காலத்தில் இசையறிவு இருந்ததோ இல்லையோஎனப் பலரும் ஐயுறக் கூடிய நிலைமையிலுள்ளோம். பல தமிழ் நூல்கள் அழிந்ததுபோலச் சிலப்பதிகாரமும் சிதைந்து போயிருப்பின் தமிழில் இசைக் கலையே என்றும் இருந்ததில்லை எனப் பறைசாற்றுவரன்றோ? எனவே, கடன் வாங்கிய நமது முன்னோர்களின் செயலும் கடன் வாங்குவது தக்கதெனும் எண்ணமும் கண்டிக்கதக்கனவேயாகும். வளர்ச்சி என்பது பல மொழிகள் ஒன்று கலத்தல் அன்று; மெய்யுணர்வும், அதினின்று தோன்றும் பல்வகை அறிவுகளுங் கலந்து பல புதிய சொற்பொருள் இயைபுகள் மலர்வதும் பின்னர் அவை பரவுதலுமே மொழி வளர்ச்சி யெனப்படும்.

இன்னோரன்ன பல உண்மைக் காரணங்களால் கலைச் சொற்கள் தமிழாக இருத்தல் வேண்டுமெனத் தமிழர் கிளர்ச்சி செய்தனர்; இன்றும் செய்கின்றனர். திருநெல்வேலி மாநாட்டில் முடிவு செய்தபடி சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் 1938-ல் ''கலைச் சொற்கள்'' என்ற நூலை வெளியிட்டனர், ஆனால், பயன் என்ன? இன்றைய பாட புத்தகங்களில் உள்ள கலைச் சொற்கள் பெரும்பாலும் வடசொற்களாகவே திகழ்கின்றன. தமிழ்ப் பாடநூல்களிலும் வட சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. பாட நூல்கள் எழுதுவோர், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் பாட நூல்களுக்குரிய உறுப்பினர் அல்லது வினைக்குழு முதலியோரும் பெரும்பாலும் ஆரியமாகவே இருப்பதால் தமிழ்ச் சொற்கள் கட்டுப்பாடுடன் விலக்கப் படுகின்றன. வடசொற்கள் மிகுதியாகத் தாண்டவமாடுகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு சில குறிப்பிடுவாம்.

(தொடரும்.)

# நூன்மதிப்பு.

### பத்தாண்டு ஆட்சிமலர்.

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீன 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்தாண்டு ஆட்சிமலர் கிடைக்கப் பெற்ருேம். இம்மலர், அடிகளின் அருளாட்சியின் அழகிற்கு அழகு செய்யும் முறையில் அமைந்திலங்குகின்றது. இம்மலரினுட் பொருளுரைகள் திருக்கயிலாய பரம்பரைச் சிறப்பினையும், திருத்தருமபுர ஆதீன வரலாற்றினையும், சைவசித்தாந்த நுட்பங்களையும், பண்டார மும்மணிக்கோவையின் சிறப்பினையும் நன்கு தெளிவுறுத்துகின்றன. இம்மலரில் காணப்பெறும் அறுபதுக்கு மேற்பட்டபடங்கள், மடத்தின் பல்வகையாய அமைப்புக்களையும், அடிகளின் ஆட்சிக்காலத்து மடத்திற்கு வந்து ஆட்சியின் சிறப்பினைக்கண்டு மகிழ்ந்த அரசியற்றலைவர் முதலியோர் உருவங்களையும், அடிகள் திருவுலாப்போதரும் சிறப்புருவத் தோற்றத்தினையும், ஆதீன ஆட்சிக்குட்பட்ட திருக்கோயிலமைப்புக்களையும், திருக்கூட்ட திருவுருவத்தோற்றங்களையும் கண்ணெதிரேகாட்டும் பான்மையில் கவின் தந்திலங்குகின்றன.

சைவமுந் தமிழுந் தழைக்கத் தோன்றிய திருமடங்கள் தம் கடமையை யுணர்ந்து செயலாற்றின் நாடு சிறப்புற்றிலங்குமென்பதற்கு இம்மலர் வழிகாட்டும் பான்மையிலிலங்குகின்றது. பத்தாண்டு ஆட்சிக்குள் பல்லோரும் புகழ அருளாட்சி நிகழ்த்திய அடிகள் நாட்டிற்கு மேலும்பல நலன்விளைத்துப் பல்லூழி வாழியர் என வாழ்த்துகின்ருேம்.

### பிரஞ்சு இலக்கியம்.

இந்நூலுள், இடைக்காலத்தில் பிரஞ்சு இலக்கியம் எத்தகைய மாறுதலடைந்ததென்பதனையும், இலக்கியச் சிறப்பினையும், சிலபுலவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் சுருக்கமாக எழுதித் தெளிவுபடுத்தியவர் புதுவை இளைஞர் கழகத்தலைவர் **திரு. ரா. ஆளவந்தான்** என்னும் அறிஞராவார். தமிழ்மொழியின் வளர்ச்சியில் நாட்டங்கொண்டு பிரஞ்சுமொழியிலிருந்து மொழிபெயர்த்து ஆக்கப்பெற்ற இந்நூல் அறிஞர் பலருடைய மதிப்புரைகளையும் பெற்றுத் திகழ்கின்றது. பிரஞ்சுமொழியிற் புலமையும், தமிழ்மொழிப் புலமையும் பெற்றுத் திகழும் இவ்வறிஞர் இந்நூல் போன்றே பன்னூலியற்றித் தமிழன்னைக் கணிந்து சிறப்புற்றுத் திகழவேண்டித் தமிழன்னையை வாழ்த்தி வணங்குகின்ருேம். இந்நூலின் விலை அணு எட்டு. வேண்டுவோர்; "தலைவர் புதுவை இளைஞர்கழகம் புதுவை" என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

### நெடுநல்வாடை.

பத்துப்பாட்டுள் ஒரு பாட்டாகிய நெடுநல்வாடையை, ஆய்வுரை நூலை, திரு. வி. க. அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவின் நினைவிற்குரிய மணிமலராகச் சென்னைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டுள்ளனர். சங்க நூலாகிய பத்துப்பாட்டுள், நக்கீரரருளிய இவ்வொரு பாட்டினைக் குறித்து நன்கு ஆய்ந்து இவ்வாய்வுரை நூலை ஆக்கித்தந்தவர் திருவாளர் இராவுசாகிபு K. கோதண்டபாணிபிள்ளை B. A., இறைதண்டற்றுணைத்தலைவர் (Deputy Collector) அவர்கள். "மருவினிய கோலநெடுநல்வாடை" என ஆன்றோர் கூறியதற்கு ஏற்ப நெடுநல்வாடை என்ற ஒன்று திரு. கோதண்டபாணிபிள்ளை அவர்கள் அறிவிற்பட்டு மருவோடியைந்த வாடையாக, இனிய வாடையாக, கோலவாடையாக, நெடுநல்வாடையாக, மற்றும் பல்வேறு வாடையாக இந்நூலுள் வீசுகின்றது. நெடுநல்வாடையுட் பொருள்களை எல்லாம் சிறு சிறு சொற்றொடர்களால் வேற்றுமொழிச் சொற்கள் விரவாமல் எளிய இனிய நடையில் நம் பிள்ளையவர்கள் எழுதியமைத்துள்ள சிறப்புப் போற்றத்தக்க தொன்றும். இந்நூல் தமிழர் ஒவ்வொருவரும் படித்தின்புறத்தக்கது; ஆராய்ச்சியாளர்கட்கு வழிகாட்டும் பெற்றியது; தமிழின் மாட்சியை உயர்த்துவது. இத்தகு மாட்சிசால் நூலின்பா லணுகித் தமிழ்மக்கள் நலன் பெறவேண்டுமெனத் தமிழ் மக்களை ஆற்றுப்படுத்துகின்றோம். இத்தகு நலந்தரும் நூலை ஆக்கித்தந்த நம் பிள்ளையவர்கள் தமிழன்னைக்கு மேலும் பல அணிகலனாகும் நூற்களை ஆக்கித்தந்து நீடூழி வாழியர் என வாழ்த்துகின்றோம். சென்னைத் தமிழ்ச்சங்கம் ஒருநூல் வெளியீட்டினாலேயே பலநூற்களாலாம் பயனைத்தமிழ் மக்கட்குத் தந்துளது. இச் சங்கம் மேலும் பன்னூல்களை வெளியிட்டுப் புகழ்பெருக்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

---

### பரிசுபெற்ற தமிழிசைப் பாடல்களின் முதற்றொகுதி.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள பரிசு பெற்ற தமிழிசைப் பாடல்களின் முதற்றொகுதி கிடைக்கப் பெற்றோம். இந்நூலுள் இசைத்தமிழ்ச் செல்வர் T. இலக்குமணப்பிள்ளை முதலிய ஐவர்களின் பாடல்கள் சேர்க்கப்பெற்றுள்ளன. இந்நூற்கு முன்னுரையாகப் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் எழுதியுள்ள உரைகள் அறிஞர்க்குப் பெருவிருந்தெனத்திகழ்கின்றன. இந்நூலிலுள்ள பாடல்களுக்கெல்லாம் சுர, தாளங்கள் அமைக்கப் பெற்றுள்ளன இந் நூல், "இசைத்துறையிற்றோய்ந்து சுர, தாளஅமைப்புக்களுடன் இயைந்த இசைப்பாடல்களைத் தமிழ்மொழியில் இதுவரையில் சிறந்த முறையில் நூல்வடிவில் வெளியிட்டோரிலர்," என்னுங்குறையினைப் போக்கி இசையுடன் மிளிர்கின்றது. வேண்டுவோர் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் விலைக்குப்பெறலாம்.

# பண்டைநாளைச் சேரமன்னர்கள்.

திரு. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள், ஆராய்ச்சியாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி : துணர் ௰௧, மலர் 8, பக்கம் 159)

இச் சேரமான் காதலன்பு மிகவுடைய பெருவேந்தன். ஒரு கால், இவன் தன் மனைவி பெருங்கோப்பெண்டு துஞ்சியகாலை, அவள் பிரிவாற்றாது பெரிதும் வருந்தி, "என் ஆருயிர் மடந்தை ஈமத்து ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்ந்து எனக்கு முன்னே மேலுலகம் புகுந்தாள். அவளில்லாத வாழ்வு உயிரில் உடம்பு போறலின், யான் இன்னும் வாழ்கின்றேன் என்பது என்ன பண்போ? இப்பிரிவு நோய் தானும் மதுகையுடையதன்று; மதுகை உடையதாயின், என்னைக் கொன்றிருக்கு மன்றே, என்னே இவ்வுலகியற்கை இருந்தவாறு" (புறம். 245) என்று புலம்பினன். இதன்கண் "பிரியின் தரியேன்" என்ற சொல் நினைந்து வருந்தும் துன்பமும், அன்பின் சிறப்பும், உண்மைக் காதல் நிலையும் விளங்குதல் காண்க.

### 5. சேரமான் குட்டுவன்கோதை.

சேரமான்களில் குட்ட நாட்டை யாண்ட சிலர் குட்டுவன் என்று கூறப்படுகின்றனர். குட்டநாடு, மலைநாட்டின் ஒருபகுதி. இதனால் குட்டுவன் என்பது இவனது சிறப்புப் பெயரெனத் துணியப்படும். படவே, இவனது இயற்பெயர் கோதை யென்பதாம். இவ்வேந்தன், "வானம் நாணவரையாது சென்றோர்க்கு ஆனாதீயும் கவிகை வண்மைக் கடுமான் கோதை" (புறம். 54) என்று எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனாரும், "மாவள்ளீகைக் கோதை" (புறம். 172) என்று வடம வண்ணக்கன் தாமோதரனாரும் புகழப்பெற்றவன்.

இவன் காலத்தில் பாண்டிநாட்டை இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனும், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும், சோழநாட்டைக் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னியும், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனும் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியும் ஆண்டுவந்தனர்.

இவனது வென்றிச் சிறப்புடைய நாடு, மேலே காட்டிய புறப்பாட்டில், "புலிதுஞ்சு வியன்புலம்" எனச் சிறப்பிக்கப் பெறுகின்றது. இவனுடைய நாடு, நெடுமொழி மன்னர்க்கு நினைக்குங்காலை, "மடிவாய் இடையன் சிறுதலையாயமொடு குறுகல் செல்லாப் புலிதுஞ்சு வியன்புலத் தற்றே" என்று மதுரைக் குமரனாரால் புகழ்ந்தோதப் படுகின்றது. இவ் வேந்தனது தலைநகரம் வஞ்சியாகிய கருவூர் என்பது "ஒளிறு வேற்கோதை யோம்பிக் காக்கும் வஞ்சி" (அகம். 263) என்ப தனாலும், "அஞ்சு வரு தடக்கைக் கடும் பகட்டியானை நெடுந் தேர்க்கோதை திருமாவியனகர்க் கருவூர் முன்றுறைத் தெண்ணீர் உயர்கரைக்குவைஇய தண்ணான் பொருநை மணலினும்" (அகம். 93) என நக்கீரனார் பாட்டாலும் அறியப் படுகிறது.

இவனுக்குப் பிட்டங்கொற்றனார் என்னுமொரு தானைத் தலைவன் உண்டு. அவனும் தன் தலைவனைப் போலப் புலவர் பாடும் புகழ் பெற்றவன். கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார் என்பவர், இவனை நோக்கி, "ஊராக் குதிரைக் கிழவ, வில்லோர் பெரும, கைவள்ளீகைக் கடுமான் கொற்ற, ஈயா மன்னர் நாண, வீயாது பரந்த நின்வசையில் வான்புகழை, வையக வரைப்பின் தமிழகம் கேட்ப, பொய்யாச் செந்நா நெளிய நாளும் பரிசிலர் ஏத்திப் பாடுப என்ப" (புறம். 168) என்று பாராட்டினர்.

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் என்னும் சான்றோர், "பெரும, நின் செவ்வி கிடைப்பது அரிதாகவுளது; ஏனெனில், பகை மேற்செல்லுமிடத்து நீ அப்பகைவர் வேற் படையின் முன்னர் உள்ளனை; அவர் படை அடர்த்து வருங் காலத்து "அகல் யாற்றுக் குன்று விலங்குகின்றாற்" போல நிற் கின்றனை; அதனால், எம் கடும்பினது இடும்பை பெரிதாக விருத்தலின் இன்னே விடுமதி பரிசில்; பொருநர்க்கு உலையாநின் வலன் வாழ்வதாக" என்று பரிசில் கடாவிப் பாராட்டெடுக் கின்றார். உறையூர் மருத்துவன் தாமோதரனார் என்னும் சான்றோர், அவனது மறச் சிறப்பை வியந்து, பகைவேந்தர்க்குக் கூறுவாராய், "மலைகெழு நாடன் கூர்வேற்பிட்டனை, தெவ்வீர், குறுகலோம்புமின்; அவன் நசைவர்க்கு மென்மையல்லது பகை வர்க்கு, இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன் விசைத் தெறி கூடமொடு பொரூஉம் உலைக்கல் அன்ன வல்லாளன்" என்று பாடிச் சிறப்பிக்கின்றார்.

இவன் தந்த பரிசில் பெற்று மகிழ்ந்த காரிக் கண்ணனார் பிறிதொருகால் இவனை யண்மி, "ஈவோர் அரியராகிய இவ் வுலகத்து வாழ்வோர் வாழ இவன் தாள் வாழ்வதாக" என

வாழ்த்தி, இவனது கொடைச்சிறப்பைப் புகழ்வார்,

"இன்று செலினும் தருமே சிறுவரை நின்று செலினும் தருமே பின்னும், முன்னே தந்தனென் என்னாது துன்னி, வைக லும் செலினும் பொய்யலனாகி, யாம் வேண்டியாங்கு எம் வறுங் கலம் நிறைப்போன்" என்றும் "இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும், களமலி நெல்லின் குப்பை வேண்டினும், அருங் கலம் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை, பிறர்க்கும் அன்ன அறத்தகையன்" என்றும் கூறி மகிழ்கின்றார்.

வடமவண்ணக்கன் தாமோதரனார் என்னும் சான்றோர், இவனது வள்ளன்மைச் சிறப்பால், இன்மைத்துயர்கெட்டு இன் புறுவார், "வன்புல நாடன் வயமான்பிட்டன் ஆரமர் கடக்கும் வேலும் அவன் இறை, மா வள்ளீகைக் கோதையும், மாறுகோள் மன்னரும் வாழியர் நெடிதே" என்று பாடி யிருக்கின்றார்.

மருதனிள நாகனார் என்னும் புலவர், வானவன் மறவன் வணங்குவில் தடக்கை, ஆனாநறவின் வண் மகிழ்ப்பிட்டன்" (அகம். 77) என்றும், ஆலம் பேரி சாத்தனார் என்பார், "வசையில் வெம் போர் வானவன் மறவன், நசையின் வாழ்நர்க்கு நன்கலஞ் சுரக்கும், பொய்யா வாய்வாட்பிட்டன் (அகம். 143) என்றும் பாராட்டினர். இவ்வகப்பாட்டாலும், இவனது "மைதவழுயர் குதிரைமலை" புகழப்படுகின்றது.

### 6. சேரமான் கோக்கோதை மார்பன்*

சேரமான் கோக்கோதை மார்பன் தொண்டி நகரைத் தனக்கு இருக்கையாகவுடைய சேரமன்னன். இவன் பெருஞ் செல்வமுடையனெனப் பொய்கையார் பாடியுள்ளார். இவனை இன்னனெனக் கூறலுற்ற இவர், "புனவர் தட்டைபுடைப்பின், அயலேயுள்ள கழனியினும், கடற்கரைச் சேர்ப்பினும் தங்கிய புள்ளினம் ஒருங்கே எழும்; அதனால் யான் அவனை, 'நாட னென்கோ ஊரனென்கோ, பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்ப னென்கோ; ஓங்குவாட் கோதையை யாங்கன மொழிகோ' (புறம். 49) என்று பாடுகின்றார்.

புலவனொருவனை ஆற்றுப் படுக்கு முகத்தால் அவனை மேலும் பரவத் தொடங்கி, "கோதைமார்பிற் கோதையானும்,

---

*இவன் காலத்திற்றான் சேரமான் கணைக்காலிரும் பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் போர் நடந்தது. பொய்கையார் களவழி நாற்பது பாடியது இப்போர் குறித்தே என்பர்.

மாக்கழி மலர்ந்த நெய்தலானும் கண்ணுறும்மே கானலம் தொண்டி; அஃதெம்மூரே, அவன் எம் இறைவன்" (புறம். 48) என்று பரிந்தேத்துகின்றார்.

### 7. சேரமான் மாரி வெண்கோ.

இச் சேரமான் காலத்தில் தமிழ் நாட்டு மூவேந்தரும் ஒத்த அன்புறவு பூண்டு நாட்டில் அறமும் இன்பமும் நிலவ ஆட்சி புரிந்தனர். சேரநாட்டின் அரசனாய் இவன் விளங்கியபோது சோழநாட்டை இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், பாண்டி நாட்டைப் பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி யும் ஆண்டுவந்தனர்.

ஒருகால் இம்மூவரும் ஓரிடத்தே கூடி இன்பவுரையாடி யிருந்தனர். அவ்விடம் இன்னதெனப் புலப்படவில்லை; கூடி யிருந்ததற்கு நேர்ந்த காரணம் காணக்கூடுவதில்லை. அக் காலத்தே ஔவையார் அவரிருந்த விடத்தை யடைந்தனர். பரமன் திருவிழி போன்ற மூன்று நாட்டு வேந்தரும் ஒருங்கிருந்த காட்சி ஔவையாரின் கண்கட்குப் பெருவிருந்து நல்கிற்று; அவரது அறிவுவளம் சான்ற உள்ளம் அயரா வின்பம் அடைந் தது. உடனே ஔவையார் மனக்கண்ணில், பார்ப்பார் வளர்க் கும் முத்தீயின் விளக்கம் எழுந்தது. அதனை ஒப்புமை காட்டி, "இரு பிறப்பாளர் வளர்க்கும் முத்திப் புரையக் காண்டக இருந்த கொற்ற வெண் குடை வேந்தீர்" எனவிளித்து, நாக லோகம் நிகர்த்த இம் மண்ணுலகம் அரசர் தங்களுடையதே யாயினும், அவர் செல்லுங்கால் உயிரொடு உடன் செல்லுவ தில்லை. ஏற்றவர் இருப்பினும், தவத்தால் நோன்மையுடையவர் எவரோ அவர்பால்தான் இது செல்லும். அத் தவப்பயனை யுடைய நீவிர் செய்யவேண்டியதும் இதுவே: 'ஏற்ற பார்ப் பார்க்கு ஈர்ங்கை நிறையப் பூவும் பொன்னும் புனல் படச் சொரிந்து, தேறல் மாந்தி மகிழ் சிறந்து, இரவலர்க்கு அருங் கலம் குறையாது நல்கி, பண்டு படைத்தவன் வரைந்த கால வெல்லை யளவும் வாழ்தல் வேண்டும்; வாழச் செய்த நல்வினை யல்லது, ஆழுங்காலைப் புணைபிறிதில்லை' (புறம். 367) என்று மொழிந்து, "யான் அறிந்த அளவையோ இதுவே; இனி, நீவிர் வானத்து வயங்கித் தோன்றும் மீனினும், மாமழை யுறையினும், நுங்கள் வாழ்நாள் உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக" என வாழ்த்திச் சென்றனர்.

(தொடரும்)




அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளரா
யிலங்கிக் காலஞ்சென்ற
திரு ச. கு. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள், M. A.

# சிலப்பதிகாரத்தில் சிலநாடகமாந்தர்

*அண்ணுமலைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளராயிலங்கிக் காலஞ்சென்ற*

**திரு. ச. க. கோவிந்தசாமிபிள்ளை** *அவர்கள்*, **M. A.,**

**கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரியின் 24-ஆம் ஆண்டுவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.**

சிலப்பதிகாரம் என்னும் அவலக் கூத்தின்கண் சித்தரிக்கப் பெற்றிருக்கும் ஆடவர் பெண்டிரெல்லாம் இயற்கைக்கும் உண்மைக்கும் இணங்க அமைக்கப் பெற்றிருக்கின்றனரா? என வாராய்தற் பொருட்டே இக் கட்டுரை எழுந்ததாகும். ஆங்கிலத்தில் 'Characters' எனவும், வடமொழியில் "நாடகபாத்திரம்" எனவும் வழங்கப்படும் சொற்களுக்கியைப சைவத்திரு மறைமலை அடிகளார் "நாடக மாந்தர்" என்னும் சொற்றொடரை அமைத்துள்ளாராகையால் அதையே நாம் இவண் கையாளுகின்றோம்.

சிலப்பதிகாரம் உண்மையில் நிகழ்ந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததாகலின், அதன்கண் ணுள்ள ஆடவர், பெண்டிரைச் சித்தரித்தலின் எத்துணை அளவு நூலாசிரியரான இளங்கோ தன் புலமையையும் உலக அனுபவத்தையும் துணைகொண்டு சமைத்துளார் எனக்கூறுதற்கியலாது எனச் சிலர் எண்ணல் இயல்பாம். கண்ணகியின் கண்ணீர் பெருக்கும் கதை உண்மையில் நிகழ்ந்தது என்பது எமக்கும் ஒப்பமுடிந்ததே. ஆனல் குன்றக் குறவரும் சாத்தனாரும் அவ் வரலாற்றினைச் சில சொற்களில் மட்டுமே கூறியிருத்தல் கூடும். கவி இயற்றப் போந்த இளங்கோ அதை அடிப்படையாகக் கொண்டு தன் கற்பனையின் ஆற்றலால் சிலப்பதிகாரத்தை இயற்றினர் என்பதே பொருத்த முடைத்தாம். தான் செவிமடுத்த கதையை அங்ஙனமே எழுதிவைத்தல் வரலாற்றுசிரியன் பணியாகும். அங்ஙனம் இளங்கோ செய்திருப்பின் சிலப்பதிகாரத்தின் பெருமைக்குக் காரணமே இல்லை.

நாம் சிலப்பதிகாரத்தை நாடகமென்றே கருதுகின்றோம். இந்நாடகத்தில் கோவலனையும் கண்ணகியையும் முறையே தலைவன், தலைவி எனலாம். மாதவி, மாதரி, கோப்பெருந்தேவி, கவுந்திபோன்றாரும், பொற்கொல்லன் பாண்டியன், மாடலன் போன்றாரும் பிறரும் நாடகமாந்தராம். படிப்போருளத்தில் நாடக மாந்தரின் ஓவியம் என்றுமழியாது ஊன்றுதற்குரிய முறையில் புலவனால் அவை உருவாக்கப்படவேண்டும். அவர்களின் பல வேறுபட்ட உருத்தோற்றம், பண்பின் பாகுபாடுகள், செயல்கள், சொற்கள் எல்லாம் இயற்கையை ஒட்டியே அமைந்திருத்தல் வேண்டும். சிலப்பதிகாரமோ அவலமுடிவை உடைய ஒரு நாடகம். அத்தகைய அவல முடிவுக்கு நாடகமாந்தருள் சிறப்பாகத் தலைவன் தலைவியின் உளப்பாங்கு காரணமாய் இருக்கலாம். சகப்பிரியரின் நாடகங்களைப்பற்றி எழுதப்போந்த "நிக்கல்" என்பார், "சகப்பிரியரின் நாடகங்களின் தலைவரெல்லாம் மேலான உளப்பாங்கு உடையவரே. ஆனால் அவர் தம் முடிவு அவலமுடிவேயாம். அத்துன்பமுடிவுக்குக் காரணம் அவருடைய பண்புகளில் காணப்படும் குறைபாடுகளேயாம்." எனக்குறிப்பிட்டுள்ளார் ("P 29 of Studies in Shakespeare") தலைவன் தலைவியின் துன்பமுடிவு, ஊழினாலும், சில எதிர் பாராத நிகழ்ச்சிகளாலும் அவர்தம் இயல்புகளின் குறைபாட்டாலும் தோன்றலாம் என்பதே மேனாட்டாரின் கருத்தாம்.

இளங்கோவடிகள் கோவலனை நம் கண்முன் எங்ஙனம் சித்தரித்து நிறுத்துகின்றார் என்பதை முதலில் நோக்குவாம். "பண்டேய்த்த மொழியினார்.........கண்டேத்தும் செவ்வேள்" என இளங்கோ அவனுடைய உருத் தோற்றத்தையும், உளப்பாங்கையும், சில சொற்களில் விளக்குகின்றார். "செவ்வேள்" என்றதால் கோவலன் வனப்புடையவன் என்பதும், வீரம் செறிந்தவனென்பதும், அருளுடையவனென்பதும், இசைப்பற்றுடையோனென்பதும் அறியப்படும். இக்கருத்தையே உளத்திற் கொண்டாராய், கோவலனைப் பின்னொருகால் குறிப்பிடும்போது, "கருணை மறவன்" என்னும் அழகிய சொற்றொடரை மாடல மறையோன் வாயிற் பெய்து இளங்கோ எழுதுகின்றார். முருகனும் கருணை மறவனன்றோ? அத்துடனமையாது, இளங்கோ 'மண்டேய்த்த புகழினான்" எனக் கோவலனைச் சிறப்பிக்கின்றார். ஈவார் மேல் நிற்கும் புகழ் என்றதற்கிணங்க, கோவலன் புகழுடையான் எனப்பட்டதால், ஈகையிற் சிறந்தவன் என்பதும் பெறப்பட்டது. இத்தகைய நற்பண்புகள் ஒருங்கே வாய்க்கப் பெற்றவன் எவ்வித குறைபையும் உடையோனாக இருத்தல் எங்ஙனம் என வினவலாம். ஒரு குறைபாடாவது, அவன் தன்னரும்பெறல் மனைவியொடுமிருந்து இல்லறத்தை நடத்த

வேண்டும் கடமையை மறந்து, இன்பத்தின் வயப்பட்டு மாதவி பாலடைந்ததாம். ஒண்டொடிகண்ணே உளவாகச் சொல்லப் படுகிற ஐம்புலநுகர்ச்சியும், கண்ணகிபால் கண்டதாக விதந் தோதினவன் பிறமங்கைபால் தன் உளத்தை எங்ஙனம் நழுவ விட்டனன். இவண் இளங்கோ குறிப்பாக உணர்த்தியிருத்தலை அறிதல் வேண்டும். கோவலனைப் பெண்டிர், செவ்வேளென வணங்கினரேயன்றி, அவன் பெண்கள்பாலோ, அவர் பண்புச் செல்வத்தின்பாலோ பெருமையுடையனல்லன் என்பது நன்கு புலனாகின்றது. இவ்வுண்மை, அவன் கண்ணகிபாலும் மாதவி பாலும் நடந்துகொள்ளும் முறையில் அறியலாகும். மாதவியின் ஆடல், பாடல், அழகு என்பவற்றில் மாலுற்று, தன் இல்லக் கிழத்தியின் உயர்நலன்களை அறியாதவனாய், அவளைத்துறந்து, நாட்டியமடந்தையொடு வாழ்கின்றான். பதியிலார் குலத்தில் பிறந்த குற்றமன்றி, பிறிதொரு குற்றமுமில்லாதவள் அப்பெண் ணணங்கு. அவள் கோவலனைத் தன் வாழ்க்கைத் துணைவ னெனவே பாவித்து, உயரிய கற்பொழுக்கத்தில் மேம்படுகின்ற னள். அவளொடும், கோவலன் பல்லாண்டு வதிந்தும் அவளை நம்பினானல்லன். விளையாட்டாக மாதவி பாடிய பாட்டைக் காரணமாகக்கொண்டு, ஐயுற்று, அவளைப் பிரிகின்றான். இச் செயலால், கோவலன் பெண்களின் பெருந்தன்மையை அறியாத வன் என்பதும், எண்ணாது ஒரு செயலை விரைவிற் செய்துபின் எண்ணிக் கவல்கின்றவன் என்பதும் நன்கு புலனாகும். மேனாட் டார் கொள்கைப்படி, இக்குறைபாடும், இக்குறைபாட்டால் விளைந்த பிரிவுமே கோவலனின் அவலமுடிவுக்குக் காரண மெனப்படும்.

> "மாதவி மடந்தைதன் கானற் பாணி
> கனக விசயர்தம் முடித்தலை நெறித்தது"

என இளங்கோவடிகள் குறிப்பிடுவதால், அக்கானற்பாணியால் உண்டான பிரிவே கோவலன் வெட்டுண்டதற்குக் காரணமாய்க் கொள்ளலாமன்றோ? அம் முடிவிற்கு ஊழ்வினையும் காரண மென்பதை நூலாசிரியர் ஆங்காங்கு விளக்கிச் செல்லுகின்றார், என்பதை அறிந்தும் அதை ஒதுக்கி, பிறகாரணங்களையே நாம் கூறிச் செல்லுகின்றோம்.

மாதவியைப் பிரிந்த கோவலன் கண்ணகியோடு புகாரிலே யே உறைந்து வாழ்க்கையை நடத்தாது மதுரை செல்லுவதற்கு முடிவுகட்டியதுதான் என்னே? அஃதும் அவன் உளத்தின் குறைபாட்டால் விளைந்ததாகும். அவனுடைய உளம் வேகமாகத் துடிக்கின்றது. எதையும் ஆராய்ந்தறியாது செய்தலே அவ னுடைய பண்புக்கு ஒத்த செயலாம். (தொடரும்.)

# மகிழ்ச்சிக் குறிப்பு.

நம் சங்கப் பேரன்பரும் வழக்கறிஞருமாகிய திருவாளர். K. சண்முகம்பிள்ளை B. A., அவர்கள் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைத் திருவாரூரில் மிகச்சிறப்புற 11—12—43-ஆம் நாளில் கொண்டாடியமை கேட்டு மகிழ்கின்றோம். **நம் சங்கத் தலைவர் இராவுசாகிபு ஐ. குமாரசாமிபிள்ளை** B. A., **அவர்கள்** இவ்விழாவிற்குச் சென்று பிள்ளை அவர்கட்கு வாழ்த்துரை வழங்கி மகிழ்ச்சியை அறிவித்தனர். நம் சங்கத் தொண்டில் பெருவிருப்புடைய பிள்ளையவர்கள் எல்லா நலன்களையும் பெற்று நீடூழிவாழியர் என இறைவனைவணங்கி வாழ்த்துகின்றோம்.

---

# இரங்கற் குறிப்பு.

தளவாய்பாளையம் இனுந்தாரரும், நம் சங்க அமைச்சரும் ஆகிய திரு. **கந்தசாமிபிள்ளை அவர்களின்** அருமைத் தந்தையார் திரு. **நீலமேகம்பிள்ளை அவர்கள்** சுபானு ஐப்பசி இருபத்தெட்டாம் நாளில் இறைவன்திருவடி நீழலடைந்தனர். இவர்களின் பிரிவாற்றுமைக்கிரங்கி, நம் சங்கத்தலைவர் **இராவுசாகிபு, திரு. ஐ.** குமாரசாமிபிள்ளை B.A., அவர்களும், **கரந்தைக் கவியரசு, திரு. R. வேங்கடாசலம்பிள்ளையவர்களும், வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனுர் அவர்களும், உழவன் திரு. அ. குழந்தைவேலர்** அவர்களும் பாடியுள்ள இரங்கற்பாக்கள் உள்ளத்தை உருக்கும் நீர்மையன. இப்பாக்கள் பிள்ளையவர்களின் அருங்குணங்களையும், அவர்களது குடிச்சிறப்பினையும் நன்கு வெளிப்படுத்துகின்றன. காலஞ்சென்ற பிள்ளையவர்களுடன் பழகியது சிறுபொழுதேயாயினும் **"அவர் இத்தகையர்"** என உலகிற்கு, அறிவிக்குமுறையில் **"திருவாசகத்தில் ஒரு வாசகத்திற்கு, ஒட்பம் நுட்பம்** அமைந்த **உரைவகுத்தருளிய நம், பண்டிதமணி, மகாமகோபாத்தியாய மு. கதிரேசச் செட்டியாரவர்களின்,** கட்டுரையினை அடுத்த பக்கத்தில் தந்துள்ளோம். நம் பிள்ளையவர்களின் ஆன்மா இறைவன்திருவடியில் இன்புற்றிருக்க இறைவனை வழுத்துகின்றோம். இவர்கள் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களை அமையங்கிடைக்குங் காலையில் தனியே எழுதி வெளியிட எண்ணியுள்ளோம். இயற்கையின் வன்மையை நன்குணர்ந்து தெளிவடைந்துள்ள நம் அமைச்சரவர்கள் ஆறுதலுறுவாராக.

# திருவாசகத்தில் ஒருவாசகம்.

திருவாளர் முதுபெரும்புலவர், மகாமகோபாத்தியாய,
பண்டிதமணி மு. **கதிரேசச்செட்டியார்** அவர்கள்.

**கரந்தைத்** தமிழ்ச் சங்கத்தின் முப்பத்திரண்டாவது ஆண்டு விழாக் குறித்து யான் சென்றபொழுது என் இனிய நண்பரும் தமிழ்ப் புலவரும் ஆகிய திரு. **நீ. கந்தசாமிபிள்ளை** யவர்கள் அன்பழைப்பிற் கிணங்கி அவர்கள் பிறப்பிடமாகிய பள்ளியக்கிரகாரத்திற்கு 17—7—'43ல் சென்றேன். அவர்களிருக்கும் இல்லத்திற்கு எதிரேயுள்ள அவர்களுடைய மற்றோரில்லத்தில் தங்க இடன் அளித்துச் செவிக்கினிய வாய்க்கினிய உணவளித்து உபசரித்தார்கள். கரந்தைக்குச் செல்லும் போதெல்லாம் அன்பர் திரு. **கந்தசாமி பிள்ளை** யவர்களுடன் அளவளாவி இன்புறுதலில் எனக்குப் பெரிதும் விருப்பமுண்டு. அளவளாவி உரையாட நேரும்போதெல்லாம்

**வண்டல் பயில்வன வெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை**
**அண்டர்பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று**

என்ற அருண்மொழிப்படி சிறந்த தமிழிலக்கியங்களின் பொருட்சுவை நயங்களையே பேசத் தூண்டுவார்கள். அங்ஙனமே நுண்பொருட் சிறப்புக்களைப் பேசி இன்புறுவதுண்டு. அந்நிலையிலிருக்குங்கால் நம் பிள்ளையவர்களின் அருமைத் தந்தையாரும் கடவுட் பத்தியும் அறிவொழுக்கங்களும் நிரம்பப் பெற்றவரும் என்பால் அன்புமிக்கவருமாகிய **நீலமேகம் பிள்ளை** யவர்கள் ஆண்டு முதிர்ச்சியால் உடல்நிலை தளர்ந்திருப்பதறிந்து அவர்களைக் காணவிரும்பினேன். அந்நிலையில் அவர்களே என்னைக் காணவும் என்னோடு உரையாடி இன்புறவும் விரும்பித் தம் பெயரனும் திரு. **கந்தசாமி பிள்ளை** யவர்கள் புதல்வனுமாகிய செல்வன் **அம்பலவாணனைத்** துணைக் கொண்டு யானிருக்கும் இல்லத்திற்கு வந்தார்கள். அவர்கள் வருங்கால் நீராடித் தூய்மை மிக்க ஆடையுடுத்துத் திருவெண்ணீறு நெற்றியிலும் உடலிலுந் திகழச் சைவக் கோலத்துடன் விளங்கியது எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியளித்தது. ஆண்டு முதிர்ச்சியில் உடலும் ஆடைமுதலியவும் அருவருக்கத்தக்க நிலையிலிருப்பது பலரிடங் காணப்படுவதொன்று. அந்நிலையிலில்லாமல் உள்ளமும் உடலுந் தூய நிலையிற் காணப்பட்டன.

உள்ளே வந்ததும் என்னை அன்பு ததும்பிய உரைகளால்

வரவேற்ருர்கள். அதன்பின் யானும் அன்புமொழி கூறி ஒரு பிரப்பிருக்கையில் அவர்களே இருக்கச்செய்து பக்கத்தில் மற்ருெரு பிரப்பிருக்கையில் யானுமிருந்தேன். அன்பர் திரு. **கந்தசாமி பிள்ளே** யவர்களும் செல்வன் **அம்பலவாணனும்** உடனிருந்தார்கள்.

உடல் நலத்தைப்பற்றி யான் வினவியதற்குத், 'தளர்ச்சி மிகுதியாகவுள்ளது. ஆண்டவன் திருவருளே உள்ளம் நாடுகின்றது.' என்று சொல்லிவிட்டு என்னே நோக்கி, 'இப்பொழுது நீங்கள் ஒன்று செய்யவேண்டும்; **திருவாசகத்தில்** அரிய பாசுரம் ஒன்றை எனக்குச் சொல்லிப் பொருள் விளக்கமும் செய்துதர வேண்டும். அஃதொன்றே இனி வேண்டுவது. அதனேயே நினேந்து பாராயணஞ் செய்ய நினேக்கின்றேன்.' என்று உளங்கனிந்து கூறினுர்கள். அவர்கள் என்னிற் பெரியவர்களாஞலும் அவர்கள் மெய்யன்போடு இட்ட பணியைத் திருவருட்டுணே கொண்டு நிறைவேற்ற முற்பட்டேன். அவர்கள் ஆண்டு முதிர்ச்சியில் எளிமையாகக் கோடற்கு யான் கூறும் பாசுரம் வடிவிற் சிறியதாக இருக்கவேண்டுமென்று எண்ணினேன்; நினேவிற்கு வந்ததொன்றைக் கூறினேன். அப்பாசுரம்:

**இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்**
**துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்**
**சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே**
**ஊராகக் கொண்டான் உவந்து,**

என்பது. இதனே யான் சொல்லும்போது ஒவ்வொரு சொல்லேயும் பொன்னேபோற் போற்றித் தாமும் இருமுறை மும்முறை சொல்லிச் சொல்லி இன்புற்ருர்கள். இடையிடையே சிவபெருமான் திருநாமங்களேச் சொல்லிச் சொல்லி மெய்புளகமுற அன்பு வயப்பட்டார்கள். எனக்கு அவர்கள் நிலே வியப்பையளித்தது. அந்நிலேயில் நம்முள்ளம் இவ்வாறு பக்குவம் அடைதல் என்றுகொலோ? என்று ஏக்கமுற்றதுமுண்டு. சிறிதேனும் வஞ்சகம் கலவாத குழந்தையன்பு அவர்கவ்பாற் காணப்பட்டது. யான் கூறிய அப்பாசுரத்தையும் பொருள் விளக்கத்தையும் மும்முறை தம் நாவாற் சொல்லிக்கொண்டு தம் பெயரனே நோக்கித் 'தம்பீ! ஒரு காகிதத்தில் ஐயா அவர்கள் சொல்லுகிறபடி மூலத்தையும் சுருக்கமான உரைக்குறிப்பையும் எழுதிவைக்கவேண்டும். யான் கூறத் தடுமாற்றம் நேரின் நீ எனக்குச் சொல்லல் வேண்டும்' என்ருர்கள். செல்வன் **அம்பலவாணனும்** 'அப்படியே செய்கிறேன்' என்று சுருக்கமாக எழுதிக்கொண்டான். அப்பாசுரப் பொருளே யான் விளக்கிய முறை வருமாறு:

தெய்விகச் சிறப்பு வாய்ந்த திருப்பெருந்துறையையுடைய சிவபெருமான் என்னுட் பேரொளிப் பிழம்பாக நின்று அஞ்

ஞான இருளையொழித்துத் துன்பத் தொடர்பை நீக்கி அழிவில்லாத பேரின்பத்தை மிகுவித்து அவ் வின்பப் பேற்றிற் குரிய மெய்யன்பை இருக்கையாகவமைத்து அதன்கண் வீற்றிருந்து என்னுள்ளத்தையே தனக்குரிய உள்ளூராக மகிழ்ந்துகொண்டான் என்பது. 'சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே ஊர் ஆகக் கொண்டான்' என்றமையால் அவர்க்குப் புறவூர் திருப்பெருந்துறையும், உள்ளூர் அடிகள் உள்ளமுமாம் என்பது போதரும். அடிகளுக்கு உபதேசிக்குங்கால் ஆண்டவன் குருவடிவில் எழுந்தருள்யது புறவூராகிய திருப்பெருந்துறையிலாயினும், அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும், குன்றே யனையாய் என்னை யாட்கொண்ட பொழுதே கொண்டிலையோ!' என்றபடி அடிகள் உடல், பொருள், ஆவிகளை யேற்றுக்கொண்டான். ஆதலின் அடிகள் உள்ளத்தவிசில் எழுந்தருளினன் என்பது பொருத்தமே. சீரார் பெருந்துறையான் உவந்து கொண்டவூர் அடிகள் சிந்தையாகிய உள்ளூரே என்பது கருதத்தக்கது. அடிகள் சிந்தையில் ஆண்டவன் வீற்றிருத்தற்குச் செய்த அருட்செயல்கள் பின்வருவன :

மக்கள் உள்ளத்தில் மயக்க இருள் அநாதியேபற்றி நிற்பது; அதனை ஒழித்தல் இன்றியமையாதது. எல்லாம்வல்ல இறைவன் அரசு வீற்றிருத்தற் குரிய இடம் விளக்கமற்றிருப்பது கூடா தன்றோ! அது குறித்துப் பேரொளிப் பிழம்பாகவுள்ள இறைவன் தன்றிருவருள் விளக்கத்தால் அவ்விருளை நீக்கினனென்பது தோன்றச் 'சோதியாய் இருளகற்றி' எனக் காரணகாரிய முறை தோன்றக் கூறினர். இருணீங்கி விளக்கம் பெற்ற தம் சிந்தையில் அழிவில்லாப் பேரின்பத்தைப் பெருக்கத் திருவுளங் கொண்டு அதற்குத் தடையாக முன்னரே ஆங்கு அமைந்து கிடந்த பாசவீக்கத்தாலுண்டாகிய துன்பத்தொடர்பை, மயக்க இருளைக் களையுமுகமாக அறுத்துப் பேரின்புறுத்தினர் என்பதை அடிகள் 'துன்பந்தொடர்வறுத்து இன்பம் பெருக்கி' யென்று புலப்படுத்தருளினர். இங்ஙனம் மயக்க விருளைக் கெடுத்து ஞானவொளி திகழச் செய்து இன்பம் பெருக்கப்பெற்ற அடிகள் சிந்தையாகிய நல்லிடத்தில் ஆண்டவன் வீற்றிருத்தற் குரிய தவிசு ஒன்று அமைக்கப்பட்டதாம்; அதுதான் மெய்யன்பு. 'அன்பிலே விளைந்த ஆரமிர்தே' என்றாராகலின் அன்பாகிய சிறந்த தவிசு அமையவேண்டியது இன்றியமையாததே. அதனையும் இறைவனே அமைத்தாராம். 'ஆங்கவன் அருளாற் பத்தி நன்குண்டாம்' என்பது இதனை வலிவுறுத்தும். நாம் இறைவனை நோக்கிச் செய்யுந் தவங் காரணமாக முதலில் நமக்கு இறைவன் அருளுவது மெய்யன்பே! இது கருதியே அடிகள் பிறிதோரிடத்துப் 'பெறவேண்டு மெய்யன்பு' என்று அருளிச்செய்வாராயினர். அன்பாகிய தவிசமைத்துச் சிந்தையாகிய நல்லிடத்து வீற்

றிருந்தருளினனென்பது தோன்ற 'என்னுடைய சிந்தையே ஊராகக் கொண்டான் உவந்து' என்றார். இறைவன் பெருமையும் தம் சிந்தையின் சிறுமையுந் தோன்ற 'என்னுடைய சிந்தையே' என்றார். என் ஊனுருடலிற் புகுந்து—அதுபற்றி வெறுப்படையாது—எளியேனைக் காப்பது கடனாகக் கொண்டு அருட்பெருக்கால் மகிழ்ச்சியோடு வீற்றிருந்தான் என்பது தோன்ற 'உவந்து' என்று அருளிச்செய்வாராயினர்.

வெண்பா வடிவிலுள்ள இச் சிறிய அருட் பாசுரத்தால் பக்குவமுள்ள அன்பனை ஆண்டவன் ஆட்கொள்ளும் நெறி விளக்கமாகக் கூறப்பட்டது. இன்னும் இத் தெய்விகப் பாசுரத்தின் நுண் பொருள்களை நினைந்து நினைந்து கூறப்புகின் நம் அளவிலமைவதன்று; ஆண்டவன் புகழ்போலப் பரந்து செல்வ தொன்று. இத்துணையும் ஒருவாறாகப் பாசுரப் பொருள் விளக்கப்பட்டது.

இதன் சுருக்கமே **நீலமேகம்பிள்ளையவர்களுக்கு** அன்றுயான் கூறியது. இதனைக்கேட்டதும் இறைவனை நினைந்து கைகூப்பித் தொழுது 'சிவசிவ' வெனத் திருநாமத்தைச் சொல்லி அமைதியடைந்தார்கள். இங்ஙனவு அவர்களுக்கு இறுதிவரையிருந்த தென்று அருமைப் புதல்வர் **திரு. கந்தசாமி பிள்ளையவர்களால்** அறிந்து இன்புற்றேன். உயிர் உடலினின்று நீங்குங்காலத்து யாதொன்று கருதப்பட்டதோ அதன்மயமாகும் அவ்வுயிரென்பது பெரியார் கண்ட அநுபவமாதலின், திருவாசகப் பொருளில் ஈடுபட்டு அங்ஙனவிலே உடல்நீத்த **பிள்ளையவர்களின்** நல்லுயிர் அப் பொருள்வடிவாக விளங்கும் இறையருளிற்றோய்ந்தின்புறும் என்பது தெளிவு.

## அறிவிப்பு.

**தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் மணிவிழா,** நிகழும் திசம்பர் 25, 26, 27-ஆம் நாட்களில் **மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார்** அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும். இராவு பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் விழாப்பேரவையைத் திறந்து வைப்பார்கள். அன்பர்கள் சென்று சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

## வள்ளல் அழகப்பர் வாழியர் பல்லாண்டே.

தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகமாகிய அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஐந்திலக்கம் பொருள் அளித்துக் கைத்தொழிற் சிறந்தோங்க வழிகாட்டிய வள்ளல் இராம. அழகப்பச் செட்டியார், M. A., Bar-at-law அவர்கட்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகம் **டாக்டர் பட்டம்** அளித்துச் சிறப்பித்துளது. திருவாளர் அழகப்பச் செட்டியார் அவர்கள் சிறந்த கொடை வள்ளல். இவர்கள், தமது அருமைத் திருமகள் உமையாள் அம்மையின் திருமண விழாவை முன்னிட்டுச் செய்துள்ள அறங்கள் மிகப் பலவாம். சிறப்பாகத் திருவனந்தைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்வளர்ச்சிக்கென இலக்கத்திற்கு மேலும் பொருளளித்தார்கள். சென்னையில் திருவாட்டி வேங்கடசுப்பராவு அம்மையாரால் பேணப் பெற்றுவரும் பெண்கள் நிலையமாகிய சேவாசதனத்தில் தமது மகளார் உமையம்மையின் பெயரால் ஒரு கட்டிடம் கட்டுவான்வேண்டி ஐம்பதினுயிரம் வெண்பொனளித்துள்ளார்கள். காரைக்குடி மகளிரில்லத்தின் வளர்ச்சி குறித்து பத்தாயிரம் வழங்கினர். காரைக்குடி உயர்நிலைப்பள்ளியின் வளர்ச்சிவேண்டி பதினோராயிரம் வழங்கியுள்ளனர், கொச்சி நாட்டிற் கல்வி பயிலும் மாணவர்கட்கு நண்பகலில் உணவிடுதற்கென ஒரு விலக்கத்து ஐம்பதினுயிரம் வழங்கியுள்ளனர். மன்னர்பிரான் அரசு இக்கொடும் போரில் கொடியோர்களைத்தொலைத்து நீதியை நாட்டி வெற்றியுறுவான் வேண்டி ஐந்திலக்கத்திற்கு மேலும் பொருள்களை அள்ளிக் கொடுத்தார்கள். மற்றும் எத்துணையோ அறநிலையங்கட்கும் பிறவற்றிற்கும் தாம் அரிதின் முயன்றீட்டிய பொருள்களை அள்ளி அள்ளி வழங்கியுள்ளனர். இத்தகு கொடைவள்ளல்களைக் குறித்து யாம் நூலில் படித்தோமே யன்றி நேரிற் கண்டோமில்லை. வள்ளல் அழகப்பரை நேரிற்கண்டு உரையாடும் பேறுநமக்கு வாய்த்தமைக்கு மகிழ்கின்றோம். செல்வம் சகடக்கால் போலவரும் என்ப தான்றோர் மொழி. இச்செல்வமுள பொழுது இம்மைப் பயனாகிய ஈகையாலீட்டத் தக்க புகழினை யீட்டிக்கொள்ளுதலே மக்களாக்கை யால் பெறும் பயனாகும். இப்பயனைப் பெற்றுப் புகழுடன் மிளிரும் திருவாளர் பெருங்கொடை வள்ளல் பேரறிஞர் (Doctor) **இராம, அழகப்பச் செட்டியார் அவர்கள் நீடூழி வாழியரென வாழ்த்துகின்றோம்.**

## தண்டபாணியின் புகழ் எண்டிசை ஓங்குக.

**இசையரசு எம். தண்டபாணிதேசிகர்** அவர்கட்கு எட்டைய புர மன்னர் பிறந்தநாளணி விழாவில் **"எட்டையபுர சமத்தான வித்துவான்"** எனச் சிறப்புப் பட்டம் வழங்கியுள்ளனர். இசை யரசு தண்டபாணி தேசிகர் அவர்கள் எம் கரந்தைப் புலவர் கல்லூரியின் ஆக்கங்குறித்து ஆவன செய்து வருபவர்கள். எம் சங்கப் பேரன்பர். தமிழ் நாட்டில் இசையரங்கெங்கும் தமிழ்ப் பாட்டின் முழக்கெழுப்பி மக்களைப் பிணித்தலில் முதன்மை பெற்றவர்கள். தேவாரத் திருமுறைகளிலுள்ள செழும்பாடல் களின் சொற்பொருளுணர்ந்து, பண்முறையோர்ந்து, பண்ணுறப் பாடிப் பல்லாயிரக் கணக்கான மக்கட்டிரளைத் தம்வயமாக்கிச் சிவநெறியிற்றேய்விக்கும் பேராற்றல் வாய்ந்த இசைப்புலவர் ஒருவர் உண்டெனின், அவர் எம் தண்டபாணிதேசிகரே யாவார் கள்.

மெய்ப்பாடுதோன்ற மெய்ப்பாட்டிசைத்துப் பொய்ப்பாட கற்றும் பெருவாழ்வளிக்கும் பெருவள்ளலாகிய தேசிகருக்குத் தமிழ் மன்னராய எட்டையபுர வேந்தரவர்கள் பட்டமளித்துச் சிறப்பித்தனை யாம் பாராட்டுகின்றேம். பட்டம்பெற்றதேசிகர் இறையின்னருளால் எல்லா நலனும் பெற்று, எண்டிசையும் புகழ் பரப்பி நீடூழி வாழியர் என வாழ்த்துகின்றேம்.

### அறிவிப்பு.

திங்கடோறும் நம் சங்கத்தினின்று வெளிப்போந்து அன்பர் களை மகிழ்வுறுத்திய நம் தமிழ்ப்பொழில், ஆசிரியர் மாற்றங் காரணமாக, ஒரு திங்கள் தங்கி அடுத்த பொழிலுடன் வெளி வருகின்றது. பொழிலன்பர்கள் பொறுத்தருளவேண்டுகின்றேன். இனி நம் பொழில் திங்கள்தோறும் தவருது வெளிப்போந்து அன்பர்களை மகிழ்வுறுத்துமென்பதை யறிவிக்கின்றேன்.

இங்ஙனம்,

ஐ. குமாரசாமிபிள்ளை,

சங்கத்தலைவர்.

# சர். ஆர். கே. சண்முகம்செட்டியார் அவர்கள்

அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

இன்று இப்பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவாற்ற என்னை அழைத்துச் சிறப்பித்ததற்காக இப்பல்கலைக் கழக வேந்தருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இஃதன்றியும் இப்பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவாற்ற, இக்கழகத்தை நிறுவியவரின் நண்பராக இருக்கும் பேறுபெற்ற என்னை இங்கு அழைத்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. இவரின் ஒழுங்குபெற்ற வாழ்க்கையையும், அழியா ஆற்றலையும், தாம் உள்ளிய சீரியபணிகளில் முழு ஆர்வத்தோடு ஈடுபடுந்திறமையையும், விரிந்த இரக்கமுள்ள உள்ளத்தையும், இவைபோன்ற பல உயர்ந்த பண்புகளையும், என்னைப் போல் இவரோடு நெருங்கிப் பழகியவர்கள் அறிந்திருக்கக் கூடும். இப்பல்கலைக் கழகத்தில் பட்டம் பெறும் மாணவர்கள், இவர்தம் "முயற்சி, ஈட்டல், தொண்டு" என்னும் சிறந்த பண்புகளைப் பின்பற்றுவார்களாக.

அரசாங்கத்தார் மக்கள் முன்னேற்றத்திற்காக எவ்வளவு நன்மைகள் செய்துவந்த போதிலும், பல்கலைக்கழகத்தில் பயின்ற நீங்கள் எவ்வாழ்க்கையில் ஈடுபடினும், தன்னலமற்ற மக்கட்டொண்டில் ஈடுபட்டுழைக்க முன்வரவேண்டும். மக்கள் தொண்டே கடவுட்டொண்டு என்பதைக் கலைவல்லோர் உணர்வர்.

இப்பல்கலைக் கழகம் நிறுவப்பட்டபொழுது, இது பழந்தமிழர்களின் கலைகளுக்கு உறைவிடமாக இருக்குமென்றும், இங்கு, சிறப்பாகத் தமிழர் நாகரிகம், தமிழ் இலக்கியம், தமிழ் நாட்டு வரலாறு ஆகிய இவைகள் ஆராயப் பெறும் என்றும் மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்க்கப் பெற்றது. எதிர்பார்த்த அளவுக்கு நிறைவேறவில்லை என்று நான் வெளிப்படையாகச் சொல்லுவதற்காக என்னைப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன். இப்பல்கலைக் கழகமும், முன்னுள்ள பல்கலைக்கழகங்களையே அடியொற்றிச் செல்கின்றதென்பதே என் எண்ணம். உலகிலுள்ள எந்தப் பல்கலைக் கழகத் தாலும், எல்லாத்துறைகளிலுமுள்ள நூல்களையும் ஒருங்கே கற்பிக்க முடியாது. சிறந்த பல்கலைக் கழகங்கள், சில குறிப்பிட்ட துறைகளில் மிகுந்த அறிவைப் புகட்டி, புகழ் பெற்றிருக்கின்றன.

(தொடரும்)